Date – 17.07.2025
MCOP– 322/2025
**ம.சா.1– பிரஷாந்த்**

**<u>மனுதாரர் தரப்பில்  முதல்  விசாரணை தொடர்ச்சி:–</u>**

என்னை ஆய்வு செய்து மருத்துவ குழுவினர் வழங்கிய அறிக்கையை எனது தரப்பில் ம.சா.ஆ–10 ஆக குறியீடு செய்து மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

விபத்து சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் அரசு கிருஷ்ணகிரியில் இருந்து ஓசூர் நோக்கி வரும் போது சாமல்பல்லம் என்ற இடத்தில் விபத்து ஏற்பட்டது. என்னுடைய பேருந்திற்கு முன்னும், பின்னும் இரண்டு பக்கமும் வாகனங்கள் சென்று கொண்டு இருந்தது என்றால் சரிதான். புகார் லாரி ஓட்டுனர் மீது கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த லாரி ஓசூரியில் இருந்து கிருஷ்ணகிரி நோக்கி  சென்ற வாகனம் என்றால் சரிதான். லாரியின் டையர் வெடித்து எதிர் திசையில் வந்து விபத்து ஏற்பட்டது என்றால் தெரியாது. ஆனால் எதிர் திசையில் வந்து விபத்து ஏற்பட்டது. நான் கொடுத்த புகாரில் டாமார் என்ற சத்தம் கேட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பேருந்தில் நான் தூங்கி கொண்டு இருந்தேன் என்றால் சரிதான். விபத்து யார் ஆஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. லாரி ஓட்டுனரின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், டையர் வெடித்து தான் ஏற்பட்டுள்ளது என்றும் சொன்னால் தெரியாது. எனக்கு ஏற்பட்டுள்ள காயம் சொற்ப காயம் என்றால் சரியல்ல. மருத்துவ குழு வழங்கிய 15சதவீத ஊனம் அதிகப்படியானது என்றால் சிரியல்ல. நிரந்தரமான செயல் இழப்பு எந்த

உறுப்புக்கும் ஏற்பாடதால் வருவாய் இழப்பு கோர முடியாது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 4வது, 6வது ரசீது முன் வைப்பு தொகை செலுத்தியது என்றால் சரிதான். ம.சா.ஆ.7 ல் ம.சா.ஆ–8 ல் குறிப்பிடப்பட்டுள்ள முன் பணம் கழிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7 ல் உள்ள ரூ.20,000/– மற்றும் ம.சா.ஆ.8 ல் உள்ள ரூ.3435/– அனுமதிக்க தக்கது என்றால் சரிதான். மொத்தமாக ரூ.23,435/– என்றால் சரிதான்.

**மறு விசாரணை: இல்லை**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Sd/P.Shunmugaraj, M.L.,
Principal Subordinate Judge,
Hosur.